**வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்துக் கம்பனியின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை ˙ - 2017 -2023**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்துக் கம்பனியின் (‘‘கம்பனி’’) 2017 முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 முதல் 2023 வரையான ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

கம்பனியால் இறுதியாக தயாரித்த 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயங்கள் | பெறுமதி |
|---|---|

| | | ரூபா |
|---|---|---|
| <u>சொத்துக்கள்</u> | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 230,229,406 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 45,021,489 |
| மொத்த சொத்துக்கள் | 275,250,895 |
| | |
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | (634,157,397) |
| <u>பொறுப்புக்கள்</u> | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 833,216,284 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 76,192,007 |
| மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் | 275,250,895 |
| | |
| மொத்த வருமானம் | 36,019,576 |
| மொத்த செலவினம் | 41,338,799 |
| மிகை/ (பற்றாக்குறை) | (5,319,223) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கம்பனியின் செயற்படு நிலை

லங்கா சீமெந்துக் கம்பனி, கம்பனிகள் சட்டத்தின் 185 ஆவது அதிகாரத்தின் கீழ் சீமெந்து மற்றும் சீமெந்தில் இருந்து தயாரிக்கப்படுகின்ற சீமெந்து கொங்கிறீட் அல்லது ஏனைய சீமெந்துக் கலவைகளில் தயாரிக்கப்படுகின்ற எந்த ஒரு பொருளையும் உற்பத்தி செய்தல், வழங்குதல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் அல்லது ஏனைய ஏதேனும் வகையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் நோக்காகக் கொண்டு 1982 செப்தெம்பர் 03 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

எனினும் காணப்பட்ட யுத்த ரீதியான நிலைமைகளின் காரணமாக காகேசன்துறையில் ஸ்தாபிக்கப்பட்ட கம்பனியின் தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கைகள் 1991 ஆம் ஆண்டு முதல் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது.

### 3.2 கம்பனியை கலைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி அமப/19/1399/115/035 ஆம் இலக்க 2019 யூலை 19 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மூலம் கலைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அமப/21/1576/320/044 ஆம் இலக்க 2021 ஒக்தோபர் 25 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கலைக்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டிருந்த | பதிலளிக்கப்படவில்லை. | கம்பனியைக் கலைக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

போதிலும் கம்பனி கலைத்தல் நடவடிக்கைகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் பின்னர் கம்பனிக்காக தலைவர் ஒருவர் அல்லது பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்படாதிருந்ததுடன் எந்த ஒரு ஊழியரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | கம்பனிக்காக தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்குச் சொந்தமான காகேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு தற்போது 33 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த சொத்துக்களின் பாதுகாப்புத் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்காமையால் அந்த தொழிற்சாலை முழுமையாக அழிவடைந்திருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சொத்துக்களின் பாதுகாப்புத் தொடர்பாக உரிய படிமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உபபிரிவு | கம்பனியின் வருடாந்த மற்றும் கால ரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் புத்தகங்கள் | பதிலளிக்கப்பட வில்லை. | கம்பனியின் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் கம்பனி 2017 ஆம் ஆண்டு முதல் உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் சென்றிருக்கவில்லை.